# GROUP IIA – 2017 06.08.2017
# GENERAL TAMIL

1. 'பாலை நிலத்திற்குரிய பறவைகள்' எவை?
   a. கிளி, மயில்  b. நாரை, அன்னம்
   **c. புறா, பருந்து**  d. கடற்காகம்

   **10th std பக்கம் 168**

2. துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்
   திறந்தாரை எண்ணிக்கொண்டற்று
   - இதில் அமைந்து வரும் மோனை.
   a. இணை மோனை  **b. பொழிப்பு மோனை**
   c. ஒரூஉ மோனை  d. கூழை மோனை

   **9th** std **பக்கம் 215**

3. இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்
   துன்பம் உறுதல் இலன்
   இதில் அமைந்து வரும் தொடைநயம்
   **a. அடி முரண் தொடை**  b. அடி மோனைத் தொடை
   c. அடி இயைபுத் தொடை  d. எதுவுமில்லை

   **9th std பக்கம் 215**

4. 'அரியவற்றுள்' - இச்சொல்லை அசைபிரித்து சரியான விடையை எழுதுக.
   a. நிரை நேர் நேர்  **b. நிரை நிரை நேர்**
   c. நிரை நேர் நிரை  d. நேர் நேர் நிரை

   **9th std பக்கம் 191**

5. பொருந்தாததை கண்டறிந்து எழுதுக.
   a. ஐந்து கிலோ - எடுத்தல் அளவை ஆகுபெயர்
   b. நாலு லிட்டர் - முகத்தல் அளவை ஆகுபெயர்
   c. மூன்று மீட்டர் - நீட்டல் அளவை ஆகுபெயர்
   **d. இந்தியா வென்றது - உவமையாகு பெயர்**

   **9th std பக்கம் 45 & 46**

6. தொழிற் பெயரைக் கண்டறிக.
‘வா’-
**a. வருதல்** b. வந்து c. வந்தான் d. வந்த
**9th std பக்கம் 73**

7. அகர வரிசையில் அமைந்துள்ள சொற்களைக் கண்டறிக.
a. காசு, கூறை, கைப்பிடி, கிளி, கேணி
**b. காசு, கிளி, கூறை, கேணி, கைப்பிடி**
c. கிளி, கைப்பிடி, காசு, கூறை, கேணி
d. கேணி, காசு, கிளி, கூறை, கைப்பிடி

8. ‘இனிய நண்ப’ - இலக்கணக் குறிப்பு தருக.
**a. குறிப்புப் பெயரெச்சம்** b. தெரிநிலை பெயரெச்சம்
c. எதிர்மறைப் பெயரெச்சம் d. குறிப்பு வினையெச்சம்

9. “எதிரூன்றல் காஞ்சி, எயில் காத்தல் நொச்சி” - இதில் நொச்சி என்பது
**a. மதில் காத்தல்** b. மதில் வளைத்தல்
c. மதில் பூச்சூடல் d. மதில்வாகை சூடல்
**10th std பக்கம் 190**

10. ‘இணையில்லை முப்பாலுக்கு இந்நிலத்தே’ – எனப் பாடியவர்
a. பாரதியார் **b. பாரதிதாசன்** c. சுரதா d. திருவள்ளுவர்
**10th std பக்கம் 8**

11. கல்லை சேர்த்துக் கட்டிக் கடலில் எறிந்த போது கல்லினை தெப்பமாகக் கொண்டு கரையேறியவர்
a. பெரியாழ்வார் b. அப்பூதியடிகள்
c. மாணிக்கவாசகர் **d. அப்பர்**
**10th std பக்கம் 106**

12. “ரூபாயத்” என்பதன் பொருள்
a. மூன்றடிச் செய்யும் **b. நான்கடிச் செய்யுள்**
c. இரண்டடிச் செய்யுள் d. ஐந்தடிச் செய்யுள்
**9th std பக்கம் 126**

13. அணு துளைக்காத கிரெம்ளின் மாளிகையில் வைத்து, திருக்குறளைப் பாதுகாக்கும் நாடு எது?
a. இலக்கிலாந்து b. சீனா **c. உருசிய நாடு** d. அமெரிக்கா
**8th std பக்கம் 5**

14. தமிழ் மூவாயிரம் எனப்படும் நூல் எது?
a. தேவாரம் b. திருவாசகம் **c. திருமந்திரம்** d. திருக்குறள்
**8th std பக்கம் 103**

15. ‘உண்பது நாழி உடுப்பவை இரண்டே’ – என்று பாடிய புறநானூற்றுப் புலவர்

**a. மதுரைக் கணக்காயனார் மகனர் நக்கீரனார்**

b. கணியன் பூங்குன்றனர்

c. நரிவெரூஉத் தலையார்

d. ஔவையார்

**9th std பக்கம் 54**

16. உலகம் முழுவதையும் ஆலிக்கருதுபவர் எதற்காகக் காத்திருக்க வேண்டும்?

a. படை வரும் வரை

**b. காலம் வரும் வரை**

c. பணம் வரும் வரை

d. பலம் வரும் வரை

17. சீறாப்புராணத்தை இயற்றியவர் யார்?

**a. உமறுப்புலவர்**

b. சீதக்காதி

c. அபுல்காசிம்

d. திருநாவுக்கரசர்

**11th std பக்கம் 45**

18. பொருத்துக:

A. காகம் — 1. கூவும்

B. குதிரை — 2. கரையும்

C. சிங்கம் — 3. கனைக்கு

D. குயில் — 4. முழங்கும்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 3 | 4 | 2 |
| b. | 4 | 3 | 1 | 2 |
| c. | 2 | 4 | 1 | 3 |
| **d.** | **2** | **3** | **4** | **1** |

**7th std பக்கம் 102**

19. ‘மூலன்’ என்னும் இயற்பெயரை உடையவர்

**a. திருமூலர்**

b. அப்பர்

c. சாத்தனார்

d. தாயுமானவர்

**8th std பக்கம் 103**

20. ‘தமிழ் ஒன்றே தமிழரைப் பிணைத்து ஒற்றுமைப் படுத்த வல்லது. தமிழ் ஆட்சி மொழியாகவும், கல்வி மொழியாகவுமானால் தவிரத் தமிழுக்கு எதிர்காலம் இல்லை என நம்பு’ - இக்கடிதப் பகுதி யாருடையது?

a. திரு.வி. கலியாண சுந்தரனார்

**b. மு. வரதராசனார்**

c. பேரறிஞர் அண்ணா

d. ஜவஹர்லால் நேரு

**9th std பக்கம் 94**

APOLLO STUDY CENTRE

21. “தேசியம் காத்த செம்மல், எனத் திரு.வி. கல்யாண சுந்தரனாரால் பாராட்டப்பெறுபவர்”.

a. அப்பேத்கர் b. அண்ணா

**c. முத்துராமலிங்கர்** d. பெரியார்

**6th std பக்கம் 94**

22. காமராசரின் அரசியல் குரு

a. காந்தியடிகள் b. பேரறிஞர் அண்ணா

c. நேரு **d. சத்திய மூர்த்தி**

**9th std பக்கம் 158**

23. “பாவலரேறு பெருஞ்சித்திரனார்” எழுதாத நூல் எது?

a. பாவியக் கொத்து b. பள்ளிப் பறவைகள்

c. கொய்யாக் கனி **d. குறிஞ்சித் திட்டு**

**9th std பக்கம் 223**

24. சாதுவன் வாணிகம் செய்யும் பொருட்டுக் கடல் கடந்து சென்ற குறிப்பு எந்த நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது?

a. சிலப்பதிகாரம் **b. மணிமேகலை**

c. குண்டலகேசி d. வளையாபதி

**9th std பக்கம் 226**

25. பொருத்துக:

A. திருவரங்கம் 1. சிதம்பரம்

B. திருச்சிற்றம்பலம் 2. ஸ்ரீரங்கம்

C. திருமறைக்காடு 3. மீனாட்சி

D. அங்கயற்கண்ணி 4. வேதாரணியம்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 3 | 4 | 2 |
| **b.** | **2** | **1** | **4** | **3** |
| c. | 3 | 2 | 4 | 1 |
| d. | 1 | 4 | 2 | 3 |

**12th std பக்கம் 160**

26. மதுரையில் உலகத் தமிழ் மாநாடு எந்த ஆண்டு நடைபெற்றது?

**a. 1981** b. 1982 c. 1983 d. 1985

27. பிறமொழிச் சொற்களுக்கு ஏற்ற தமிழ்ச்சொற்களைப் பொருத்துக:

A. மீனாட்சி 1. அங்கயற்கண்ணி

B. மதுரவசனி 2. வாள்நெடுங்கண்ணி

C. கட்கநேத்ரி 3. நீள்நெடுங்கண்ணி

APOLLO STUDY CENTRE

D. விசாலாட்சி 4. தேன்மொழிப்பாவை

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 4 | 3 | 2 |
| **b.** | **1** | **4** | **2** | **3** |
| c. | 1 | 3 | 4 | 2 |
| d. | 1 | 2 | 4 | 3 |

**12th std பக்கம் 160**

28. பிழையற்றத் தொடரைத் தேர்வு செய்க.
  a. ஓர் மாவட்டத்தில் ஒரு அமைச்சர் அவருடை மகனோடு சுற்றுலா மேற்க்கொண்டார்
  **b. ஒரு மாவட்டத்தில் ஓர் அமைச்சர் அவருடைய மகனோடு சுற்றுலா மேற்கொண்டார்**
  c. ஒரு மாவட்டத்தில் ஒரு அமைச்சர் அவரது மகனோடு சுற்றுலா மேற்க்கொண்டார்
  d. ஒரு மாவட்டத்தில் ஒரு அமைச்சர் அவரது மகனோடு சுற்றுலா மேற்கொண்டார்

29. "மாகதம்" எனப்படுவது
  a. மதுரகவி b. சித்திரகவி **c. வித்தாரகவி** d. ஆசுகவி

30. அகத்திணையின் வகைகள்
  a. ஐந்து b. ஆறு c. மூன்று **d. ஏழு**

**10th std பக்கம் 166**

31. பகுபதத்தில் குறைந்தளவு இருக்க வேண்டிய உறுப்புகள்
  a. பகுதி, சந்தி b. இடைநிலை, சாரியை
  **c. பகுதி, விகுதி** d. விகுதி, சாரியை

**9th std பக்கம் 100**

32. உறுவேனில் - இலக்கணக் குறிப்பு யாது?
  a. வினைத்தொகை **b. உரிச்சொற்றொடர்**
  c. பண்புத்தொகை d. வினையெச்சம்

33. "இறை, செப்பு" என்பன கீழ்கண்ட எச்சொல்லுக்கு வழங்கும் வேறு பெயர்கள்
  a. வினா b. மொழி **c. விடை** d. இறைவன்

**10th std பக்கம் 97**

34. கீழ்க்காணும் தொடரில் சரியான விடையை தேர்வு செய்க.
  a. யானையின் கண் சிறியது b. யானையின் கண்கள் சிறியது
  **c. யானையின் கண்கள் சிறியன** d. யானையின் கண் சிறியன

35. "அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கும்"
  - இவ்வரிகள் இடம்பெற்ற நூலின் பெயர்

a. தேவாரம் **b. திருவாசகம்** c. ஏர் எழுபது d. திருக்கோவை

36. “கேழல்” என்பதன் பொருளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

a. எருமை b. புலி c. கரடி **d. பன்றி**

**10th std பக்கம் 175**

37. பட்டியல் I ஐ பட்டியல் II டன் பொருத்தி விடை எழுது.

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| A. திருஞானசம்பந்தர் | 1. திருவாதவூர் |
| B. திருநாவுக்கரசர் | 2. திருவெண்வெணய் நல்லூர் |
| C. சுந்தரர் | 3. திருவாமூர் |
| D. மாணிக்கவாசகர் | 4. சீர்காழி |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| **a.** | **4** | **3** | **2** | **1** |
| b. | 4 | 2 | 3 | 1 |
| c. | 2 | 4 | 1 | 3 |
| d. | 2 | 3 | 4 | 1 |

**12th std பக்கம் 89**

38. “கொங்குதேர் வாழ்க்கை அஞ்சறைத் தும்பி
காமம் செப்பாது கண்டது மொழிமோ”
- இவ்வரிகள் இடம் பெற்ற நூல் எது?

a. நற்றிணை b. கலித்தொகை
**c. குறுந்தொகை** d. புறநானூறு

39. “தேம்பாவணி” எத்தனை காணடங்களை உடையது

a. இரண்டு **b. மூன்று** c. நான்கு d. ஐந்து

**8th std பக்கம் 105**

40. குலசேகரஆழ்வார் இயற்றிய நூல் எது?

a. நந்திக்கலம்பகம் **b. நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம்**
c. கலித்தெகை d. நற்றிணை

**10th std பக்கம் 205**

41. கள்ள வேடம் புனையாதே – பல
கங்கையில் உன்கடம் நனையாதே - இதில் ‘கடம்’ என்பதன் பொருள்

**a. உடம்பு** b. கால்கள் c. கைகள் d. தலை

42. திருஞானசம்பந்தருக்கு தொடர்பில்லாத தொடரை தேர்ந்தெடுக்க.

a. உமையாள் பொற்கிண்ணத்தில் அளித்த ஞானப்பாலை உண்டார்
b. 220 தலங்கள் வழிப்பட்டார்
c. திராவிடச் சிசு என ஆதிசங்கரரால் குறிப்பிடப்பட்டார்

APOLLO STUDY CENTRE

**d. அப்பூதியடிகளின் மூத்த மகளை உயிர் பெற செய்தார்**

**10th std பக்கம் 104**

43. உமறுப்புலவர் பாடிய முதுமொழி மாலை என்ற நூலில் உள்ள பாக்கள்

a. 120 பாக்கள் b. 204 பாக்கள் **c. 80 பாக்கள்** d. 67 பாக்கள்

**10th std பக்கம் 179**

44. சாலை இளந்திரையன் தமிழக அரசின் "பாவேந்தர் விருது" பெற்ற ஆண்டு எது?

a. 1990 **b. 1991** c. 1993 d. 1994

**10th std பக்கம் 231**

45. தமிழ் நாட்டில் நடத்தப்பட்ட முதல் தேசிய சமுதாய நாடகம் எது?

**a. கதரின் வெற்றி** b. தேசியக் கொடி

c. தேச பக்தி d. தமிழ்தேசியம்

**8th std பக்கம் 109**

46. படித்துப்புரிந்து சரியான விடையைத் தேர்ந்தெடு:

1. தலைமை உன்னைத் தேடிக்கொண்டு வந்தால் வரட்டும்
2. நீ அதைத் தேடிக்கொண்டு போய் அலையாதே
3. நீ தேட வேண்டுவது தொண்டு
4. தொண்டுக்கு முந்து, தலைமைக்குப் பிந்து
   என்பது உன் நெறியாக இருக்கட்டும்

a. நேரு எழுதிய கடிதவரிகள் **b. மு.வ. எழுதிய கடிதவரிகள்**

c. அண்ணா எழுதிய கடிதவரிகள் d. காந்தி எழுதிய கடிதவரிகள்

**9th std பக்கம் 96**

47. "வட்ட மேசை மாநாடு நடந்த ஆண்டு"

a. 1915 b. 1917 **c. 1930** d. 1932

**10th std பக்கம் 70**

48. முதன் முதலில் இயக்கப்படமாக எடுக்கப்பட்ட விலங்கு

**a. குதிரை** b. நாய் c. பூனை d. மான்

**10th std பக்கம் 113**

49. பெரியாரின் பெண் விடுதலைச் சிந்தனைகள் __________ வகைப்படும்.

**a. இரண்டு** b. மூன்று c. நான்கு d. ஐந்து

**10th std பக்கம் 41**

50. இந்தியாவில் மட்டுமல்லாமல் ஆகிய நாடுகளில் குயடிசுத் தலைவர்களாகவும், தமிழர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என்பது தமிழினத்துக்குப் பெருமை சேர்க்கிறது.

a. சிங்கப்பூர், மலேசியா **b. சிங்கப்பூர், மொரிசியசு**

c. சிங்கப்பூர், இலங்கை d. சிங்கப்பூர், பினாங்கு

**9th std பக்கம் 112**

APOLLO STUDY CENTRE

51. கரிகாலங்கண்ணி என்னும் மூலிகையை குறிக்காத பெயர்

a. கரி சாலை  b. கையாந்தகரை  **c. சிங்கவல்லி**  d. தேகராசம்

**9th std பக்கம் 142**

52. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.
இக்குறளில் பயின்று வரும் பொருள்கோள் எது?

**a. நிரல்நிறைப் பொருள்கோள்**  b. ஆற்றுநீர் பொருள்கோள்

c. மொழிமாற்றுப் பொருள்கோள்  d. விற்பூட்டுப் பொருள்கோள்

**9th std பக்கம் 144**

53. 'கேண்மை' - இச்சொல்லின் எதிர்ச்சொல்

a. துன்பம்  **b. பகை**  c. நட்பு  d. வலிமை

54. சொல்லுக்கு முதலில் மட்டுமே வரும் ஔகாரம், எத்தனை மாத்திரை அளவினதாய்க் குறைந்து ஒலிக்கும்

a. ஒன்றே கால் மாத்திரை  **b. ஒன்றரை மாத்திரை**

c. ஒன்றே முக்கால் மாத்திரை  d. ஒரு மாத்திரை

**10th std பக்கம் 22**

55. "இரட்டைக்கிளவி இரட்டிற் பிரிந்திசையா" எனக் குறிப்பிடும் நூல்

a. தொல்காப்பியம்  **b. நன்னூல்**  c. அகப்பொருள்  d. அகத்தியம்

56. பொருந்தாததை எடுத்து எழுதுக.

a. அரசன் வந்தது - திணைவழு

b. கபிலன் பேசினாள் - பால்வழு

c. குயில்கள் கூவியது - எண் வழு

**d. கமலா சிரித்தாள் - கால் வழு**

**9th std பக்கம் 117**

57. சொல்லை பொருளோடு பொருத்துக:

A. வனப்பு  1. வலிமை

B. அடவி  2. அழகு

C. வீறு  3. இனிமை

D. மதுரம்  4. காடு

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| **a.** | **2** | **4** | **1** | **3** |
| b. | 2 | 3 | 1 | 4 |
| c. | 3 | 2 | 4 | 1 |
| d. | 1 | 3 | 2 | 4 |

APOLLO STUDY CENTRE

58. பொருத்துக:

A. திரிகடுகம் — 1. பெருவாயின் முள்ளியார்
B. ஆசாரக்கோவை — 2. நல்லாதனார்
C. பழமொழி நானூறு — 3. காரியாசான்
D. சிறுபஞ்சமூலம் — 4. முன்றுறை அரையனார்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| **a.** | **2** | **1** | **4** | **3** |
| b. | 2 | 3 | 4 | 1 |
| c. | 3 | 2 | 1 | 4 |
| d. | 3 | 1 | 4 | 2 |

**9th std பக்கம் 29**

59. தமிழ்விடு தூதின் ஆசிரியர் யார்?

a. கபிலர்
b. நரிவெரூஉத் தலையார்
**c. அறியப்படவில்லை**
d. ஓதலாந்தையார்

**10th std பக்கம் 128**

60. ஐஞ்சிறு காப்பியங்கள் - என்னும் வகைப்பாட்டில் இல்லாத நூல் எது?

a. நாக குமார காவியம்
b. நீலகேசி
**c. குண்டலகேசி**
d. சூளாமணி

**10th std பக்கம் 37**

61. வைதோரைக் கூட வையாதே - இந்த
வையமுழுதும் பொய்த்தாலும் பொய்யாதே
இவ்வரியை பாடியவர்

a. குடும்பைச் சித்தர்
**b. கடுவெளிச்சித்தர்**
c. திருமூலர்
d. கவிமணி

**6th std பக்கம் 74**

62. 26 முதல் 32 வயது வரை உடைய பருவ மகளிர்

a. மடந்தை
b. அரிவை
c. மங்கை
**d. தெரிவை**

**12th std பக்கம் 80**

63. குமரகுருபரர் எம் மொழிகளில் புலமைமிக்கவர்

a. தமிழ், வடமொழி
**b. தமிழ், வடமொழி, இந்துத்தானி**
c. தமிழ், மலையாளம்
d. தமிழ், ஆங்கிலம்

**8th std பக்கம் 180**

64. “உயிரிரக்கமே பேரின்ப வீட்டின் திறவுகோல்” என்று கூறியவர்

a. கம்பர்
b. திருவள்ளுவர்
c. இளங்கோவடிகள்
**d. வள்ளலார்**

**10th std பக்கம் 210**

APOLLO STUDY CENTRE

65. “இயற்படு பொருளால் கண்டது மறந்து
முயற்கோ டுண்டெனக் கேட்டது தெளிதல்”
இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது?

a. சீவகசிந்தமாணி
b. சிலப்பதிகாரம்
**c. மணிமேகலை**
d. கம்பராமாயணம்

**9th std பக்கம் 129**

66. “ஒன்று கொலாம்” என்னும் திருப்பதிகம் பாடியவபர் யார்?

a. சேக்கிழார்
**b. திருநாவுக்கரசர்**
c. இளங்கோவடிகள்
d. பாரதியார்

**10th std பக்கம் 104**

67. “ஒரு நாடு வளமுடன் இருக்கு வேண்டுமானால், அந்நாட்டு மக்கள் அனைவரும் ஒத்த ஒழுக்கமுடையவர்களாக இருக்க வேண்டும்” – எனக் கூறியவர் யார்?

a. பாரதியார்
b. அம்பேத்கார்
**c. பெரியார்**
d. அறிஞர் அண்ணா

**10th std பக்கம் 43**

68. இந்திய நாட்டை, ‘மொழிகளின் காட்சிச் சாலை’ என்று கூறியவர்

a. குமரிலபட்டர்
b. கால்டுவெல்
**c. ச. அகத்தியலிங்கம்**
d. ஈராஸ் பாதிரியார்

**9th std பக்கம் 8**

69. ‘நல்வி’ - இச்சொல்லின் பொருளை எழுதுக.

**a. மான்**
b. நாய்
c. புலி
d. பசு

70. “சாதியையும் நிறத்தையும் பார்த்து மனிதனை மனிதன் தாழ்வுபடுத்துவது பெருங்கொடுமை” எனக் கூறியவர்

a. காந்தியடிகள்
b. பாரதியார்
**c. பசும்பொன் முத்துராமலிங்கர்**
d. பாரதிதாசன்

**6th std பக்கம் 93**

71. குளிர்பாதனப் பெட்டியில் பயன்படுத்தப்படுவது

a. கார்பன் டை ஆக்சைடு
b. ஆக்சிஜன்
**c. குளோரோ.ஃ.புளுரோ கார்பன்**
d. மீத்தேன்

**9th std பக்கம் 226**

72. ‘தமிழ் பிறமொழித் துணையின்றி தனித்து இயங்குவது மட்டுமின்றித் தழைத்தோங்கவும் செய்யும்’ – எனக் கூறியவர்

a. டாக்டர் கிரௌல்
**b. கால்டுவெல்**
c. வீரமாமுனிவர்
d. ஜி.யு.போப்

**7th std பக்கம் 7**

APOLLO STUDY CENTRE

73. தமிழ் இலக்கணம் படிக்க படிக்க விருப்பத்தை உண்டாக்குவது என்று கூறியவர்

a. அம்பேத்கர் **b. கெல்லட்**

c. கமில்சுவலபில் d. முனைவர் எமினோ

**10th std பக்கம் 15**

74. ஒவ்வொருவரும் தாம் சிறந்ததாகக் கருதும் சமயத்தை கைக் கொண்டு வாழவிடுவதே தருமம்" – எனக் கூறியவர்

**a. இராணி மங்கம்மாள்** b. அஞ்சலையம்மாள்

c. வள்ளியம்மை d. வேலுநாச்சியார்

**9th std பக்கம் 187**

75. உன் மானத்தை விட நாட்டின் மானம் பெரியது என்று உணர். உன் உயர்வை விட, நாட்டின் உயர்வு இன்றியமையாதது என்று உணர், உன் நலத்தை விட நாட்டின் நலம் சிறந்தது என்று உணர், நெருக்கடி நேரும் போது உன் நலம், உயர்வு, மானம் ஆகியவற்றை நாட்டுக்காக விட்டுக்கொடு - இக்கூற்று யாருடைய கடிதப் பகுதி?

a. பேரறிஞர் அண்ணா b. அன்னை இந்திராகாந்தி

**c. மு. வரதராசனார்** d. திரு.வி.க

**9th std பக்கம் 96**

76. நான் நிரந்தரமானவன் அழிவதில்லை
எந்த நிலையிலும் எனக்கு மரணமில்லை
எனக் கவிதை பாடியவர்

a. சுரதா **b. கண்ணதாசன்** c. பாரதிதாசன் d. மு. மேத்தா

**9th std பக்கம் 44**

77. எளிமையினால் ஒரு தமிழன் படிப்பில்லை யென்றால்
இங்குள்ள எல்லாரும் நாணிடவும் வேண்டும்
எனப் பாடியவர்

**a. பாரதிதாசன்** b. பாரதியார் c. சுரதா d. கண்ணதாசன்

**10th std பக்கம் 39**

78. மரக்கலத்தை குறிக்கும் நான்கு சொற்களை தேர்ந்தெடுக்க

a. கலம், தோணி, புணரி, மிதவை b. கலம், பரிசில், ஓடம், பரவை

**c. கலம், வங்கம், புணை, அம்பி** d. கலம், பரிசில், ஆழி, ப.்றி

**9th std பக்கம் 65**

79. கரணத்தேர் __________ எனப் பிரியும்.

a. கரணம் + தேர் **b. கரணத்து + ஏர்**

c. கரன் + அத்து + ஏர் d. காரணம் + தேர்

80. மாறியுள்ள சீர்களை முறைப்படுத்தி எழுதுக.

a. இல்லாரை எள்ளுவர் செல்வரை எல்லாரும்

APOLLO STUDY CENTRE

b. இல்லாரை செல்வரை எல்லாரும் எள்ளுவர்
**c. இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை**
d. செல்வரை எல்லாரும் எள்ளுவர் இல்லாரை

81. மாறியுள்ள சீர்களை முறைப்படுத்தி எழுதுக.
a. குணநலம் நலனே சான்றோர் பிறநலம்
b. சான்றோர் நலனே குணநலம் பிறநலம்
**c. குணநலம் சான்றோர் நலனே பிறநலம்**
d. சான்றோர் குணநலம் நலனே பிறநலம்

82. ஓடையில் யானையும் யானைக் _______ம் நின்றன.
**a. யானைக் கன்று**
b. யானைக் குட்டி
c. யானைக் குருளை
d. யானைப் பிள்ளை

**7th std பக்கம் 102**

83. Refrigerator - என்று ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல்லைத் தேர்ந்தெடுக்க.
**a. குளிர் பதனப் பெட்டி**
b. குளிரூட்டும் பெட்டி
c. குளிர்சாதனப் பெட்டி
d. குளிர் காக்கும் பெட்டி

**9th std பக்கம் 226**

84. 'கோ' - இச்சொல்லின் உரிய பொருளைக் கண்டறிக.
**a. அரசன்** b. அன்னம் c. ஆதவன் d. அன்பு

85. உரிமை விளங்கும் பொருளை கண்டறிந்து பொருத்துக.
A. அத்திப் பூத்தது போல — 1. ஒற்றுமை
B. உயிரும் உடம்பும் போல — 2. பயனில்லை
C. ஆற்றில் கரைத்த புளி — 3. வேதனை
D. இடிவிழுந்த மரம் போல — 4. அரிய செயல்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 3 | 1 | 4 | 2 |
| b. | 2 | 3 | 4 | 1 |
| **c.** | **4** | **1** | **2** | **3** |
| d. | 4 | 2 | 1 | 3 |

86. பொருந்தாத இணையைக் கண்டறிக.
a. மேதி - எருமை
b. சந்தம் - அழகு
**c. கோதில் - பசு**
d. அங்கணர் - சிவன்

87. பொருத்துக: பொருளறிந்து பொருத்துக:

A. நயனம் 1. இருள்

B. இந்து 2. புன்னகை

C. முறுவல் 3. கண்கள்

D. அல் 4. நிலவு

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| **a.** | **3** | **4** | **2** | **1** |
| b. | 3 | 4 | 1 | 2 |
| c. | 4 | 3 | 2 | 1 |
| d. | 3 | 2 | 1 | 4 |

88. நற்றிணையைத் தொகுப்பித்தவர் யார்?

**a. பன்னாடு தந்த மாறன் வழுதி** b. இளம் பெருவழுதி

c. உக்கிரப் பெருவழுதி d. பாண்டியன் மாறன் வழுதி

**11th std பக்கம் 26**

89. உரிய பொருளைத் தேர்ந்தெழுதுக.

புரிசை

a. வேகம் b. வளம் **c. மதில்** d. மேகம்

90. சரியான பொருளைத் தேர்ந்தெடுக்க:

a. இடுப்பு **b. இடி** c. மேகம் d. கதிரொளி

91. நந்திக்கலம்பகம் யார் மீது பாடப் பெற்றது

a. பாண்டியமன்னன் b. குலசேகர ஆழ்வார்

**c. மூன்றாம் நந்திவர்மன்** d. பல்லவ மன்னன்

**10th std பக்கம் 204**

92. எட்டுத் தொகை நூல்களுள் முதலாவதாக அமைந்த நூல்

a. குறுந்தொகை **b. நற்றிணை** c. ஐங்குறுநூறு d. பதிற்றுப்பத்து

**12th std பக்கம் 26**

93. சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப் பெற்றவர் யார்?

a. உமறுப்புலவர் **b. கம்பர்** c. நாமக்கல் கவிஞர் d. பாரதியார்

**10th std பக்கம் 65**

94. சரியான தொடரைக் கண்டறிக.

இரட்டைக் காப்பியம் என்பன

a. மணிமேகலையும், சீவக சிந்தாமணியும்

b. சிலப்பதிகாரமும், வளையாபதியும்

**c. சிலப்பதிகாரமும், மணிமேகலையும்**

d. மணிமேகலையும், வளையாபதியும்

**9th std பக்கம் 133**

APOLLO STUDY CENTRE

95. வெள்ளிப்பிடி அருவா
ஏ! விடலைப் பிள்ளை கைஅருவா
சொல்லியடிச்ச அருவா
எப்பாடல் வகையை சார்ந்தது

a. தொழிற் பாடல்
b. விளையாட்டுப் பாடல்
c. ஒப்பாரி பாடல்
d. சடங்குப் பாடல்

**6th std பக்கம் 45**

96. "யாமறிந்த புலவரிலே இளங்கோவைப் போல்" – என இளங்கோவைப் புகழ்ந்து பாடியவர் யார்?

a. வாணிதாசன்
b. கணியன்
c. பாரதியார்
d. பாரதிதாசன்

**10th std பக்கம் 36**

97. 'பகுத்தறிவுக் கவிராயர்' எனக் தமிழக மக்களால் அழைக்கப்படுபவர்

a. ந. பிச்சமூர்த்தி
b. உடுமலை நாராயணகவி
c. சுரதா
d. வாணிதாசன்

**6th std பக்கம் 131**

98. பொருத்துக:

A. எட்வர்டு மை பிரிட்சு — 1. ஒருவர் மட்டும் பார்க்கும் படக் கருவி
B. எடிசன் — 2. இயக்கப்படும்
C. ஈஸ்ட்மன் — 3. ஓடும் குதிரையை வைத்து இயக்குப் படம்
D. பிரான்சிஸ் சென்கின்சு — 4. படசுருள்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 4 | 3 | 1 |
| b. | 3 | 1 | 4 | 2 |
| c. | 2 | 3 | 1 | 4 |
| d. | 4 | 2 | 3 | 1 |

**10th std பக்கம் 113**

99. பாவாணர், சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநராக பணியமர்த்தப்பட்ட ஆண்டு

a. 08.05.1974
b. 05.01.1981
c. 07.02.1902
d. 12.04.1976

**8th std பக்கம் 146**

100. தமிழர் புலம் பெயரக் காரணங்கள்

a. பஞ்சம், அந்நியர் படையெடுப்பு
b. வறுமை, மேலை நாட்டின் மோகம்
c. வாணிகம், தமிழ்நாட்டில் வாழ விருப்பம் இன்மை
d. வாணிகம், வேலை வாய்ப்பு

**9th std பக்கம் 110**

APOLLO STUDY CENTRE

APPOLO STUDY CENTRE
No.25, Nandhi Loop Street,
West C.I.T. Nagar, Chennai – 600 035
Near T.Nagar Bus Stand,
Landmark: Nandhi Statue
Ph: 24339436, 42867555, 9840226187
E-mail: appolotnpsc@gmail.com
Website: www.appolosupport.com
www.appolotraining.com

STUD